1970 மார்ச் 30]

பீ. அளகாபுரி கூட்டுறவு பால்வழங்கு சங்கம்

***594 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்** : மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அமைந்துள்ள பீ. அளகாபுரி கூட்டுறவுப் பால் பண்ணையின் நிலை பற்றி ஏதேனும் வழக்கு இருக்கிறதா?

(இ) எவ்வளவு காலமாக வழக்கு நடைபெறுகிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) பீ. அளகாபுரி பால் வழங்கு கூட்டுறவு சங்கத்தின் அலுவல்கள் குறித்து விசாரணை நடத்தும்படி, திருச்சி துணைப் பதிவாளர் (பால்பண்ணை) 1967–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் தேதி அன்று கட்டளையிட்டார். சங்கத்தின் முன்னாள் தலைவர் ரூ. 3,354·43 அளவிற்குப் பணம் கையாடல் செய்து பொய்க்கணக்குக் காண்பித்ததாக விசாரணையில் தெரிய வந்ததால், புலன் விசாரணை நடத்தி சட்டப்படி மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக இது காவல் துறையினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புலவர் பொ. பொன்னம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, அளகாபுரி பால்வழங்கு கூட்டுறவுப் பண்ணை ஒழுங்காக நல்ல முறையில் நடைபெறுவதற்கு, நடவடிக்கைகளை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1970–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ந் தேதியில்தான் காவல்துறையிடம் தகவல் சேகரிக்க கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்து தகவல் வந்தவுடன் வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

உணவுப் பொருள் வழங்குதுறையிலுள்ள அரசாங்க லாரிகள்

***595 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உணவு இலாகாவுக்குச் சொந்தமான அரசாங்க லாரிகள் எத்தனை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உணவுப்பொருள் வழங்குதுறைக்குச் சொந்தமாக முப்பத்தாறு லாரிகள் இருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : அவற்றில் சென்னையில் மட்டும் எத்தனை லாரிகள் இருக்கின்றன? மாவட்டங்களில் எவ்வளவு? சென்னையில் நம்மிடம் லாரிகள் இருக்கும்போது காண்டிராக்ட் லாரியில் ஏற்றி சமீபத்தில் 1,045 அரிசி மூட்டைகள் காணாமற்போகும்படியான நிலைமை ஏன் ஏற்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சென்னையில் மத்திய சர்க்கார் கோடவுனில் இருந்து சரக்கு கொண்டுவர லாரிகள் பயன்படுத்தப்படவில்லை. காண்டிராக்ட் லாரி மூலமே ஏற்பாடு செய்யப்படுகிறது. நம்முடைய லாரிகள் பெரும்பாலும் மாவட்டங்களில் இருந்து சர்க்கரை, அரிசி, நெல் போன்றவற்றை அவ்வப்போது உடனுக்குடன் கொண்டு வரவே பயன்படுத்தப் படுகின்றன.

போத்த நதி கிராம ஆற்றின் குறுக்கே பாலம்

***605 வினா—திருமதி கே. பி. ஞானபியம்மாள்** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ஊராட்சி மன்றத்திற்குட்பட்ட போத்த நதி கிராம ஆற்றின் மீது பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், பாலம் கட்டுவது தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவர் அவர்களே, இந்தப் பாலம் இல்லாதது நீண்ட நாட்களாகப் போக்குவரத்திற்கு இடையூருகவும் அங்குள்ள மக்களுக்கு வசதிக் குறைவாகவும் இருப்பதன் காரணத்தால் மீண்டும் பரிசீலனை செய்து கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகள் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்தப் பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாய் செலவாகும் என்று கூறப்படுகிறது. தலைமைப் பொறியாளர் கொடுத்திருக்கிற அறிக்கையின்படி அங்கேயிருக்கிற வண்டிப் பாதைகளைச் சீரமைத்ததற்குப் பிறகு அந்த வேலையைச் செய்வது எளிதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்று சொல்கிருர்கள். ஆகவே, பொறுத்திருந்து நிலைமைகளைப் பார்த்து எடுத்துக்கொள்ளலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: கள்ளிக்குடி ஊராட்சிமன்றத்திலிருந்து அப்படிப்பட்ட கோரிக்கை ஏதாவது வந்திருக்கிறதா? போத்த நதி கிராமம் மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கிறது. வண்டிப் பாதையை செம்மைப்படுத்திக் கொடுப்பார்களானல் அரசாங்கம் அதைச் சீக்கிரம் எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்திலிருந்து எந்தவிதமான கோரிக்கையும் அரசுக்கு வரவில்லை. இவையெல்லாம் ஆங்காங்குள்ள ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுகிற திட்டங்களாகும்.

புதிய ஆவடி சாலையிலுள்ள வீடுகள்.

* 606 வினு.—**திரு. சி. கோவிந்தராஜன்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) அண்மையில் சென்னை 38-வது டிவிசன், புதிய ஆவடி சாலையி லுள்ள காந்தி நகரில் கட்டப்பட்டிருந்த சுமார் 1,500 வீடுகள் கார்ப்ப ரேஷன் அதிகாரிகளால் இடித்துத் தள்ளப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) & (இ) புதிய ஆவடி சாலையில் காந்தி நகர் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சுமார் 150 குடிசைகள் உட்பட, சுமார் 1,200 குடிசைகள் மாநகராட்சியால் 1969, ஆகஸ்ட், 10, 11 நாட் களில் அகற்றப்பட்டன. காந்தி நகரில் மீண்டும் அமைக்கப்பட்ட சுமார் 240 குடிசைகளை அகற்றுவதற்கான நடவடிக்கை 1970, மார்ச் 8-ம் நாளன்று மேற்கொள்ளப்பட்டது.

மாநகராட்சிக்குச் சொந்தமான நிலப்பகுதியில் செங்குன்றம் ஏரியி லிருந்து கீழ்ப்பக்கம் குடிநீர் தூய்மைப்படுத்தும் நிலையத்திற்குத் தண்ணீர் கொண்டுவரும் குழாய் அமைந்திருக்கும் இடத்தில் மாநகராட்சியின் அனுமதியின்றி இக்குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தன. குழாய் வழியே செல்லும் நீர் அசுத்தப்படுத்தப்பட்டதாலும் குடிசைவாழ் மக்கள் தண் ணீர் கொண்டு செல்லும் குழாயின் மீது பொருத்தப்பட்டிருந்த மூடிகளை அகற்றிவிட்டு நீர் எடுத்துக்கொண்டதாலும் இவர்களை வெளியேற்றுவதற் காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.